தினமணி

**தென்னைக்கு நுண்ணூட்ட உரமிட வேண்டும்: வேளாண் உதவி இயக்குநர் த. பாரதி**

First Published : 23 Jul 2010 11:39:07 AM IST

ஆறுமுகனேரி, ஜூலை 22: தென்னைகளுக்கு நுண்ணூட்ட உரமிட வேண்டும் என, உடன்குடி வேளாண் உதவி இயக்குநர் த. பாரதி ஆலோசனை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தென்னையில் காய்கள் அதிக மகசூலுக்கு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவை அவசியம். இதற்காக ஆண்டுக்கு ஒருமுறை மரம் ஒன்றுக்கு யூரியா 1:3 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2 கிலோ பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் 2 கிலோ ஆகிய 3 உரங்களையும் 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும்.

மேலும், தென்னைகளுக்கு இரும்பு, மாங்கனீஸ், துத்தநாகம், போரான், தாமிரம் ஆகிய நுண்ணூட்ட சத்துக்களும் தேவை. இவை குறைந்தால் ஓலைகள் சரிவர விரியாது. பசுமை குன்றி காணப்படும். குரும்பைகள் உதிரும். தேரைக்காய்கள் உருவாகும். பருப்பு திரட்சி இன்றி காணப்படும். மரத்தின் நுனி சிறுத்துக் காணப்படும். எனவே, தென்னைகளுக்கு நுண்ணூட்டச் சத்துக்கள் குறைபாட்டை சரிசெய்ய நுண்ணூட்ட உரமிட வேண்டும்.

தென்னை நுண்ணூட்ட உரத்தில் இரும்பு 3.8 சதவீதம், மாங்கனீஸ் 4.8 சதவீதம், துத்தநாகம் 5 சதவீதம், போரான் 1.6 சதவீதம், தாமிரம் 0.5 சதவீதம் உள்ளன.

மரம் ஒன்றுக்கு தென்னை நுண்ணூட்ட உரம் 1 கிலோ வீதம் இட வேண்டும். மரத்தின் அடியில் இருந்து 5 அடி தொலைவுக்கு வட்டப் பாத்தி அமைத்து மண்ணைக் கொத்தி விட்டு நுண்ணூட்ட உரத்தை பாத்தி முழுவதும் தூவி கிளறி விட்டு நீர் பாய்ச்ச வேண்டும். நுண்ணூட்ட உரத்தை தொழு உரத்துடன் கலந்தும் இடலாம்.

நுண்ணூட்ட உரங்கள் இடுவதால் பூக்கள், குரும்பைகள் உதிர்வது கட்டுப்படுத்தப்படும். நன்கு விரிந்த பாளைகள் உருவாகும். தேரைக்காய்கள், ஒல்லிக் காய்கள் கட்டுப்படுத்தப்பட்டு திரட்சியான காய்கள் உருவாகும். அதிக விளைச்சல் கிடைக்கும்.

தென்னை நுண்ணூட்ட உரம் உடன்குடி வேளாண் விரிவாக்க மையத்தில் தேவையான அளவு இருப்புள்ளது என்றார் அவர்.

**"நிகழாண்டு சம்பா பருவத்தில் கோ- 43 ரகத்தை பயன்படுத்தலாம்: வேளாண்மை இணை இயக்குநர் யோசனை**

First Published : 23 Jul 2010 10:47:02 AM IST

தஞ்சாவூர், ஜுலை 22: நிகழாண்டு சம்பா பருவத்தில் கோ- 43 ரகத்தை பயன்படுத்தலாம் என்று வேளாண்மை இணை இயக்குநர் பொ. லோகநாதன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: கோ- 43 ரகத்தை விதைக்கும்போது சென்ற ஆண்டு பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பெறப்பட்ட விதைகளை பயன்படுத்தக் கூடாது. சூடோமோனாஸ் என்ற உயிரியல் மருந்தை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற வகிதத்தில் கலந்து, விதை நேர்த்தி செய்ய வேண்டும். இது பாக்ட்ரீயா தொடர்புடைய நோய்களை தடுக்கும். இல்லையெனில், பெவிஸ்டின் மருந்தை ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் என்ற விகிதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்திட வேண்டும். நடுவதற்கு முன் ஒரு கிலோ சூடோமோனாஸ் மணலில் அல்லது மக்கிய குப்பை எருவுடன் கலந்து நிலத்தில் இட்டு நடவு செய்ய வேண்டும்.

பயிர் பூக்கும் தருவாயிலும், பால் பிடிக்கும் தருவாயிலும் காப்பர் ஹைட்ராக்சைடு ஏக்கருக்கு 500 கிராம் அல்லது புரோபோகோனோசால் ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து மாலைவேளையில் தெளிக்க வேண்டும். பொட்டாஷ் உரத்தினை மேலுரமாக இடவேண்டும். தழைச்சத்து அதிகம் இடக்கூடாது. இந்த முறைகளை கையாண்டு ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு மேற்கொள்வதன் மூலம் நெல் பழம் மற்றும் பாக்டீரியா இலைகருகல் நோய் கோ-43 ரகத்தில் வருவதை தடுக்கலாம்.

தினமலர்

**தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய உதவி**

உளுந்தூர்பேட்டை :தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய நிதியுதவி வழங் கப்படுகிறது.திருநாவலூர் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சுமதி வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பு:திருநாவலூர் ஒன்றிய தோட்டக்கலை துறை மூலம் 2010-11 ஆண்டிற்கு தேசிய தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயி களுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. இதன்படி மா விவசாயம் செய்பவர்களுக்கு இரண் டரை ஏக்கருக்கு செடி மற் றும் உரம் வாங்குவதற்கு 9,900 ரூபாய் வழங்கப்படு கிறது. முந்திரி இரண்டரை ஏக்கருக்கு 11 ஆயிரத்து 500, கொய்யாவிற்கு 18 ஆயிரத்து 800, வாழைக்கு 7,500 மற் றும் சம்மங்கி பூவிற்கு 4,500 ரூபாயும் மானியமாக வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த தோட் டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் வெண்டை, கத்தரி, பூசணி, மிளகாய் விதைகள் திருநாவலூர் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் விற்பனைக்கு உள்ளது.

**புதுகை மாவட்ட விவசாய குறைதீர் கூட்டம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., ராமதாஸ் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நடந்த விவாதம்: ஜெயமணி (வன பாதுகாவலர்): புதுக்கோட்டை மாவட்டத்தில் தனியார் நிலத்தில் மரக்கன்று நடவு செய்து அவற்றை பாதுகாக்க முன்வரும் விவசாயிகளுக்கு வன விரிவாக்க மையத்தின் சார்பில், ஆண்டுதோறும் 1,000 ரூபாய் மானியம் வழங்கப்படும்.

ராமதீர்த்தார் (விவசாயி): புதுக்கோட்டை மாவட்டத்தில் வளர்க்கப்படும் தைல மரங்களால் நீர்வளம் மற்றும் நிலவளம் பாதிக்கப்பட்டுள்ளது. வனத்துறைக்கு சொந்தமான காடுகளில் தைல மரம் நடவு செய்வதை தவிர்க்கவேண்டும்.

ராமதாஸ் (டி.ஆர்.ஓ.,): தைலமரம் நடவு செய்வதை தவிர்க்கவேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை வனத்துறையின் கவனத்துக்கு கொண்டு செல்லபடும்.முத்துக்குமரன்(விவசாயி): தேசிய பயிர் பாதுகாப்பு திட்டப்பயன் பாதிக்கப்படும் அனைத்து விவசாயியையும் சென்றடையவேண்டும்.தனபதி(விவசாயி): பயிர் பாதுகாப்பு திட்டம் முறையாக செயல்பட விவசாயிகளை உள்ளடக்கிய குழு அமைக்கவேண்டும்.டி.ஆர்.ஓ: நல்ல யோசனை விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.பாலாண்டார்(விவசாயி): புதுக்கோட்டை நகரில் கவனிப்பாரின் விடப்பட்டுள்ள அனைத்து குளம் தூர்வாரி ஆழப்படுத்தவேண்டும்.டி.ஆர்.ஓ: நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்திருப்பதி(விவசாயி): மழையூரில் தேசிய வங்கி கிளை ஒன்றை திறக்கவேண்டும்.டி.ஆர்.ஓ: மழையூரில் கனரா வங்கி கிளை விரைவில் திறக்கப்படும்.கூட்டத்தில், வேளாண் இணை இயக்குனர் ராஜூ, வன விரிவாக்க மைய வன பாதுகாவலர் ஜெயமணி, தேசிய பயிர் பாதுகாப்புத்திட்ட மேலாளர் சுதா உட்பட பலர் பங்கேற்றனர்.

**தொலைநோக்கு பார்வையில் நீர்வளதிட்டம் : புதுகை மாவட்ட விவசாயிகள் கோரிக்கை**

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் நீர்வள, நிலவளத் திட்டத்தை ஏனோ தானோ என்றில்லாமல் தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுத்தவேண்டும்' என மாவட்ட நிர்வாகத்தை விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உலகவங்கி நிதி உதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மழை காலங்களில் கிடைக்கும் தண்ணீரை சேமித்து வைத்து விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்துவது தான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக மாவட்டத்தில் வெள்ளாறு மற்றும் அம்புலியாறு வடிநிலப் பகுதி நீர்நிலை மராமத்து மூலம்

மேம்படுத்தும் பணி கடந்த இரண்டு ஆண்டாக நடக்கிறது. இதன்மூலம் அணைகட்டு, கண்மாய், குளம், ஏரி மற்றும் வரத்துவாரியை தூர்வாரி ஆழப்படுத்தவேண்டும்.

மழை காலங்களில் தண்ணீர் பெருகும்போது உடைப்பு எடுக்காமலிருக்க அவற்றின் கரை பலப்படுத்தவேண்டும். தண்ணீர் வீணாவதை தடுக்கும் விதமாக கலிங்கு மற்றும் மடை சீரமைக்கவேண்டும். நீர்நிலைக்கு தண்ணீர் எளிதில் வந்துசேரும் விதமாக வரத்துவாரி ஆக்ரமிப்பு அகற்றி தயார் நிலையில் வைக்கவேண்டும் என தொடர்புடைய அரசுத்துறை அதிகாரிக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இருந்தும் இத்திட்டத்தின் கீழ் நீர்நிலை மேம்படுத்தும் பணி ஏனோ தானோ என்று நடப்பதாக விவசாயிகள் பலர் குற்றஞ்சாட்டியுள்ளனர். குறிப்பாக, அம்புலியாறு வடிநிலப் பகுதிகளான கொத்தமங்கலம், கீரமங்கலம் போன்ற பகுதிளில் உள்ள அணைகட்டு, கண்மாய், குளம் மற்றும் வரத்துவாரியை தூர்வாரி மேம்படுத்தும் பணி முறையாக நடக்கவில்லை. கொத்தமங்கலம் பெரிய ஏரியில் கரையை சுற்றி அரையடி ஆழத்துக்கு மட்டுமே தூர்வாரி கரையில் கொட்டப்பட்டதன் மூலம் பணியை முடித்துவிட்டனர். இரண்டு மடை பழுதடைந்து பல ஆண்டாகியும் சரிசெய்யப்படவில்லை. இதுபோன்று கலிங்கு மீது பூசப்பட்டிருந்த சிமென்ட் பூச்சு பெயர்த்து எடுத்துவிட்டு அதன் மீது லேசாக சிமின்ட் பூசிவிட்டு புதிய கலிங்கு கட்டியுள்ளதாக அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

அம்புலி ஆற்று அணைக்கு தண்ணீர் வரும் வரத்துவாரி மணல் நிரம்பியும், புதர் மண்டி கிடக்கிறது. இவற்றை முழுமையாக அகற்றினால் மட்டுமே மழை காலத்தில் அணைக்கு தண்ணீர் வர வாய்ப்பு உள்ளது. "நீர்வள, நிலவள திட்டத்தின் மூலமான நீர்நிலை மேம்படுத்தும் பணி ஏனோ, தானோ என்றில்லாமல் தொலைநோக்கு பார்வையுடன் முறையாக நடப்பதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்யவேண்டும்' என குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**புதுகை மாவட்ட விவசாய குறைதீர் கூட்டம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., ராமதாஸ் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நடந்த விவாதம்: ஜெயமணி (வன பாதுகாவலர்): புதுக்கோட்டை மாவட்டத்தில் தனியார் நிலத்தில் மரக்கன்று நடவு செய்து அவற்றை பாதுகாக்க முன்வரும் விவசாயிகளுக்கு வன விரிவாக்க மையத்தின் சார்பில், ஆண்டுதோறும் 1,000 ரூபாய் மானியம் வழங்கப்படும்.

ராமதீர்த்தார் (விவசாயி): புதுக்கோட்டை மாவட்டத்தில் வளர்க்கப்படும் தைல மரங்களால் நீர்வளம் மற்றும் நிலவளம் பாதிக்கப்பட்டுள்ளது. வனத்துறைக்கு சொந்தமான காடுகளில் தைல மரம் நடவு செய்வதை தவிர்க்கவேண்டும்.ராமதாஸ் (டி.ஆர்.ஓ.,): தைலமரம் நடவு செய்வதை தவிர்க்கவேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை வனத்துறையின் கவனத்துக்கு கொண்டு செல்லபடும்.முத்துக்குமரன்(விவசாயி): தேசிய பயிர் பாதுகாப்பு திட்டப்பயன் பாதிக்கப்படும் அனைத்து விவசாயியையும் சென்றடையவேண்டும்.தனபதி(விவசாயி): பயிர் பாதுகாப்பு திட்டம் முறையாக செயல்பட விவசாயிகளை உள்ளடக்கிய குழு அமைக்கவேண்டும்.டி.ஆர்.ஓ: நல்ல யோசனை விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.பாலாண்டார்(விவசாயி): புதுக்கோட்டை நகரில் கவனிப்பாரின் விடப்பட்டுள்ள அனைத்து குளம் தூர்வாரி ஆழப்படுத்தவேண்டும்.டி.ஆர்.ஓ: நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் திருப்பதி(விவசாயி): மழையூரில் தேசிய வங்கி கிளை ஒன்றை திறக்கவேண்டும்.டி.ஆர்.ஓ: மழையூரில் கனரா வங்கி கிளை விரைவில் திறக்கப்படும்.கூட்டத்தில், வேளாண் இணை இயக்குனர் ராஜு, வன விரிவாக்க மைய வன பாதுகாவலர் ஜெயமணி, தேசிய பயிர் பாதுகாப்புத்திட்ட மேலாளர் சுதா உட்பட பலர் பங்கேற்றனர்.

**துவரை சாகுபடி பயிற்சி விவசாயிகள் பங்கேற்பு**

கந்தர்வக்கோட்டை: கந்தர்வக்கோட்டையில் வேளாண் துறை மூலம் வேளாண் இயக்கம், விவசாயிகளுக்கான பயிற்சி வழங்கப்பட்டது.கந்தர்வக்கோட்டை வெள்ளாளவிடுதி மாநில எண்ணை வித்துப்பண்ணையில் நீர்வள மற்றும் நிலவள மேம்பாட்டு திட்டம் மூலம் பயிர் இயக்கம் மூலம் கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, குன்னாண்டார்கோவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு துவரை சாகுபடி பரப்பை விரிவுபடுத்தும் விதத்தில் உளுந்து, துவரை சாகுபடி பயிற்சி முகாம் வேளாண் இணை இயக்குனர் ராஜ் தலைமையில் நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் வைத்தியநாதன் வரவேற்றார். விவசாயிகளுக்கு உளுந்து, துவரை விதைப்பு முறை குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பின், பண்ணையில் பயிரிடப்பட்டுள்ள ஏ.பி.கே., முதல் ரக உளுந்து, துவரை பயிர்களை நேரடியாக விவசாயிகளுக்கு காண்பித்தனர். விவசாயிகளின் கேள்வி, சந்தேகத்துக்கு வேளாண் அதிகாரி விளக்கம் அளித்தனர். விவசாயிகளுக்கு மானிய விலையில் உளுந்து, துவரை விதைகள் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை வெள்ளாளவிடுதி மாநில எண்ணை வித்துப்பண்ணை அதிகாரிகள் ரவீந்திரன், ஆண்டனி டேவிட், திருமலைச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் இச்சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் நடந்தது.விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு 55 ரூபாய் வீதம் விலை வழங்கவேண்டும். தென்னை மரங்கள் அதிகளவு சாகுபடி நடக்கும் பகுதிகளில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையங்கள் திறக்கவேண்டும். விவசாயிகளிடமிருந்து கொப்பரை தேங்காய் மட்டுமின்றி உரித்த தேங்காய்களையும் கொள்முதல் செய்யவேண்டும். மேட்டூர் அணையை விரைவில் திறந்து சம்பா சாகுபடியை உறுதிசெய்யவேண்டும். விவசாயிக்கு நிபந்தனையின்றி பயிர்கடன் வழங்கவேண்டும். விவசாயப் பணிக்கு தடையின்றி மின்சாரம் வழங்கவேண்டும். ரசாயன உரம் விலையை குறைக்கவேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் ஆகஸ்ட் 17ம் தேதி தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க இரண்டாவது மாநில மாநாடு நடத்தப்படும். ஆகஸ்ட் முதல் வாரத்தில் திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்தில் காவிரி பாசன விவசாயிகளின் கோரிக்கை மாநாடு நடத்தப்படும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், மாநிலத் தலைவர் இலகுமய்யா தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் துரைமாணிக்கம், துணைத் தலைவர்கள் துளசிமணி, பெரும்படையார், துணைச் செயலாளர்கள் மாசிலாமணி, இந்திரஜித், பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் சாகுபடி செய்ய நீர் சிக்கனம்! தஞ்சாவூர் கலெக்டர் வேண்டுகோள்**

தஞ்சாவூர் : தஞ்சையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது.கலெக்டர் சண்முகம் பேசியதாவது: காவிரி, கல்லணை கால்வாய், வெண்ணாறில் 157 பணி 392 கிலோ மீட்டர் அளவுக்கு 3.73 கோடியில் மேற்கொள்ளப்படுகிறது. தவிர, திட்டம் சாரா பணி, கட்டுமான பணி, சீரமைப்பு, ஷட்டர் சீரமைப்பு போன்றவையும் நடக்கிறது. மேட்டூரில் இருந்து நீர் வரும் முன் அனைத்து பணியும் முடிவடையும்.

அரசு விதிப்படி, 17 சதவீத விதை அதாவது 1,127 டன் விதை இருப்பில் உள்ளது. கூடுதல் விதை இருப்பு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள் கிலோவுக்கு 5 ரூபாய் மானிய விலையில் பெறலாம். கூட்டுறவு மற்றும் தனியார் உரக்கடையில் யூரியா 6,920 டன், டி.ஏ.பி., 2,694 டன், பொட்டாஷ் 2,638 டன், காம்ப்ளக்ஸ் 1,452 டன் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மூலம் 95 கோடி கூட்டுறவு வங்கி மூலம் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 18 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

புதிய உறுப்பினர் சேர்க்கை தொடர்ந்து நடக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 820 கோடி வேளாண் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது காலை 11 மணி நேரம், மாலை 4 மணி நேரம் மின்சாரம் என 15 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. மேட்டூர் திறக்கப்படும்போது விவசாயத்துக்கு நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

**விவசாயிகள் விவாதம் வருமாறு:**

கக்கரை சுகுமாறன்: கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடனுக்கும் 100க்கு 10 ரூபாய் பங்குத்தொகையாக பிடித்தம் செய்கின்றனர். ஆடிப்பெருக்குக்குள் மேட்டூர் திறக்க வேண்டும். தஞ்சை வரும் முதல்வர் விவசாயிகளுக்கு சலுகை அறிவிக்க வேண்டும்.

விமலநாதன்: பங்குத்தொகையை கடனை திரும்ப செலுத்தியதும் வழங்க வேண்டும். தோட்டக்கலைத்துறை மூலம் ஆடிக்குள் முழு மானியத்தில் விதை வழங்க வேண்டும். கடன் வசூலிக்க அடியாள் பயன்படுத்தும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.மதுக்கூர் சந்திரன்: மதுக்கூர் வாடியக்காடு பகுதி டிரான்ஸ்ஃபார்ம் பழுதானதால் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதை மாற்ற வேண்டும்.ஜீவகுமார்: வங்கி கடனுக்காக டிராக்டர்களை சட்டவிரோதமாக குண்டர் மூலம் எடுத்து வந்த வங்கி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சிலர் சவரிமுத்து: குடோன் வசதி இல்லாததால், கொப்பரை கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. கால்நடைக்கு தேவையான மருந்து இருப்பு வைக்க வேண்டும்.சாமிநடராஜன்: குறுவை சாகுபடி இழந்த விவசாயிக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.

## 3.50 லட்சம் டன் கரும்பு அரவை : குருங்குளம் ஆலை எதிர்பார்ப்பு

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டம் குருங்குளம் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி மாணிக்கம் தெரிவித்ததாவது: தஞ்சை மாவட்டம் குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் 2009 - 10ம் ஆண்டு அரவை பருவம் 2009 நவ., 13ம் தேதி துவங்கி 2010 ஏப்., 28ம் தேதியுடன் முடிவடைந்தது. கடந்த 2009 - 10ம் ஆண்டு அரவை பருவத்தில் 3.30 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டது. விவசாயிகளின் ஒத்துழைப்புடன் அப்பருவத்தில் இந்த ஆலைக்கான கரும்பு 3 லட்சத்து 41 ஆயிரத்து 513 டன், பிற ஆலைகளான பெரம்பலூர், நேஷனல், நடிப்பிசை புலவர், செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இருந்து பெறப்பட்ட 4,327 டன் கரும்பும் சேர்த்து 3 லட்சத்து 45 ஆயிரத்து 940 டன் கரும்பு அரவை செய்யப்பட்டு 9.36 சதவீதம் சராசரி சர்க்கரை கட்டுமானம் பெறப்பட்டுள்ளது.இந்த அரவை பருவத்தில் அரவை செய்யப்பட்ட 3 லட்சத்து 41 ஆயிரத்து 513 டன் கரும்பில் டன் ஒன்றுக்கு 1,548 ரூபாய் 70 பைசா வீதம் 52.89

கோடி ரூபாய் கிரயத்தொகை விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.கடந்த 2009 - 10ம் ஆண்டு நடப்பு பருவத்துக்கு ஜூலை 15ம் தேதி வரை 11 ஆயிரத்து 567 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் இருந்து வரும் அரவை பருவத்துக்கு 3.50 லட்சம் டன் கரும்பு அரவைக்கு பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விலை உயர்ந்தும் நெல் கொள்முதல் குறைவு**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் 2009 - 10ம் ஆண்டு காரீப் பருவத்தில் நெல் கொள்முதல் கடந்தாண்டைவிட குறைந்துள்ளது.தஞ்சை மாவட்டத்தில் 2009 - 10ம் ஆண்டு காரீப் பருவத்தில் 367 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இம்மண்டலத்தில் உள்ள விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மூன்றாம் சாகுபடியை கருத்தில் கொண்டு தற்போது 70 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகிறது.

இங்கு அரசு அறிவித்தபடி கிரேடு "ஏ' நெல் குவிண்டால் ஒன்று 1,100 ரூபாய், பொது ரக நெல் குவிண்டால் ஒன்று 1,050 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது, தாலுகா வாரியாக தஞ்சை மூன்று, திருவையாறு ஒன்று, ஒரத்தநாடு 10, கும்பகோணம் 14, திருவிடைமருதூர் 10, பாபநாசம் 13, பட்டுக்கோட்டை 15, பேராவூரணி நான்கு என 70 கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. தேவைக்கேற்ப கூடுதல் கொள்முதல் நிலையம் திறக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

கடந்த 2009 - 10ம் காரீப் பருவத்தில் தஞ்சை மாவட்டத்தில் 4 லட்சத்து 43 ஆயிரத்து 910 டன் நெல் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு 485.51 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு காரீப் பருவத்தில் 4 லட்சத்து 71 ஆயிரத்து 732 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்தாண்டைவிட 27 ஆயிரத்து 822 டன் நெல் கொள்முதல் குறைந்துள்ளது.

கடந்தாண்டைவிட அரசு நெல் விலையை கடந்த இரண்டு ஆண்டாக உயர்த்தியதுடன், 300 மூடைக்கு மேல் இருந்தால் தனி நபர் அல்லது குழுவான விவசாயிகளிடம் இருந்து அவர்களது களத்துக்கே சென்று கொள்முதல் செய்தல், உடனடியாக பணம் பட்டுவாடா செய்தல், அதிக கொள்முதல் நடக்கும் இடங்களில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து கொள்முதலை ஊக்கப்படுத்துதல் போன்ற பல திட்டங்களை செயல்படுத்தினர். இருந்தும் நெல் கொள்முதல் குறைந்தது.

இதுபற்றி விவசாயிகள் கூறியதாவது: சாகுபடி பரப்பு, பருவமழை, மேட்டூர் நீர் வரத்து போன்றவை தொடர்ந்து குறைகிறது. ஆண்டு கொள்முதலில் பெரும்பாலான மாதங்கள் 17 சதவீத ஈரப்பதத்துடன் நெல் கொள்முதல் செய்யப்பட்டதாலும், ஈரப்பதம் அதிகம், நெல் பழம் உள்ளது.

கறுப்பு நெல் அதிகமுள்ளது. உலர்த்தி, தூற்றித்தர வேண்டும் என கொள்முதல் நிலையத்தில் கெடுபிடி மேற்கொள்வதால் விவசாயிகள் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை விரும்பவில்லை.

தனியார் வியாபாரிகள் இவை எதையும் பார்ப்பதில்லை. நெல் தரம் குறைந்திருந்தால் விவசாயிகளிடம் பேசி சற்று விலையை குறைத்து உடன் வாங்கி, பணத்தை பட்டுவாடா செய்வதால் விவசாயிகள் தனியார் வியாபாரிகளை விரும்புகின்றனர்.நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் 4.44 லட்சம் டன் கொள்முதல் என்பது இம்மாவட்ட விவசாயிகளுடைய நெல் மட்டுமல்ல. பக்கத்து மாவட்டங்களில் கொள்முதல் நிலையம் இல்லாததாலும், அங்கு விலை குறைந்து வாங்கப்படுவதாலும் அங்கிருந்து லாரி மூலம் தஞ்சை மாவட்டத்துக்கு கொண்டு வந்து விற்பதால் இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

பிரச்னை எங்கிருந்தாலும், நெல் கொள்முதல் குறைவு, உற்பத்தி குறைவு நாட்டின் உணவு பஞ்சத்தை ஏற்படுத்துவதுடன் அரிசி விலையை கடுமையாக உயர்த்தும். அரசின் கொள்முதல் பாதிப்பால், பொது விநியோக திட்டமான ரேஷன் கடை, பல திட்டங்களில் இலவச அரிசி வழங்குதல், சத்துணவு உட்பட பல திட்டங்களுக்கு அரிசி ஒதுக்கீடு போன்றவை பாதிக்கப்படும். வெளி மாவட்டங்களில் இருந்து கூடுதல் விலைக்கு அரசு கொள்முதல் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

**விவசாயிகள் சாகுபடி செய்ய நீர் சிக்கனம்! தஞ்சாவூர் கலெக்டர் வேண்டுகோள்**

தஞ்சாவூர் : தஞ்சையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது.

கலெக்டர் சண்முகம் பேசியதாவது: காவிரி, கல்லணை கால்வாய், வெண்ணாறில் 157 பணி 392 கிலோ மீட்டர் அளவுக்கு 3.73 கோடியில் மேற்கொள்ளப்படுகிறது. தவிர, திட்டம் சாரா பணி, கட்டுமான பணி, சீரமைப்பு, ஷட்டர் சீரமைப்பு போன்றவையும் நடக்கிறது. மேட்டூரில் இருந்து நீர் வரும் முன் அனைத்து பணியும் முடிவடையும்.

அரசு விதிப்படி, 17 சதவீத விதை அதாவது 1,127 டன் விதை இருப்பில் உள்ளது. கூடுதல் விதை இருப்பு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள் கிலோவுக்கு 5 ரூபாய் மானிய விலையில் பெறலாம். கூட்டுறவு மற்றும் தனியார் உரக்கடையில் யூரியா 6,920 டன், டி.ஏ.பி., 2,694 டன், பொட்டாஷ் 2,638 டன், காம்ப்ளக்ஸ் 1,452 டன் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மூலம் 95 கோடி கூட்டுறவு வங்கி மூலம் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 18 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

புதிய உறுப்பினர் சேர்க்கை தொடர்ந்து நடக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 820 கோடி வேளாண் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது காலை 11 மணி நேரம், மாலை 4 மணி நேரம் மின்சாரம் என 15 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. மேட்டூர் திறக்கப்படும்போது விவசாயத்துக்கு நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

**விவசாயிகள் விவாதம் வருமாறு:**

கக்கரை சுகுமாறன்: கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடனுக்கும் 100க்கு 10 ரூபாய் பங்குத்தொகையாக பிடித்தம் செய்கின்றனர். ஆடிப்பெருக்குக்குள் மேட்டூர் திறக்க வேண்டும். தஞ்சை வரும் முதல்வர் விவசாயிகளுக்கு சலுகை அறிவிக்க வேண்டும்.

விமலநாதன்: பங்குத்தொகையை கடனை திரும்ப செலுத்தியதும் வழங்க வேண்டும். தோட்டக்கலைத்துறை மூலம் ஆடிக்குள் முழு மானியத்தில் விதை வழங்க வேண்டும். கடன் வசூலிக்க அடியாள் பயன்படுத்தும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.மதுக்கூர் சந்திரன்: மதுக்கூர் வாடியக்காடு பகுதி டிரான்ஸ்ஃபார்ம் பழுதானதால் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதை மாற்ற வேண்டும்.ஜீவகுமார்: வங்கி கடனுக்காக டிராக்டர்களை சட்டவிரோதமாக குண்டர் மூலம் எடுத்து வந்த வங்கி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சிலர் சவரிமுத்து: குடோன் வசதி இல்லாததால், கொப்பரை கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. கால்நடைக்கு தேவையான மருந்து இருப்பு வைக்க வேண்டும்.சாமிநடராஜன்: குறுவை சாகுபடி இழந்த விவசாயிக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.

3.50 லட்சம் டன் கரும்பு அரவை : குருங்குளம் ஆலை எதிர்பார்ப்பு

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டம் குருங்குளம் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி மாணிக்கம் தெரிவித்ததாவது: தஞ்சை மாவட்டம் குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் 2009 - 10ம் ஆண்டு அரவை பருவம் 2009 நவ., 13ம் தேதி துவங்கி 2010 ஏப்., 28ம் தேதியுடன் முடிவடைந்தது. கடந்த 2009 - 10ம் ஆண்டு அரவை பருவத்தில் 3.30 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டது. விவசாயிகளின் ஒத்துழைப்புடன் அப்பருவத்தில் இந்த ஆலைக்கான கரும்பு 3 லட்சத்து 41 ஆயிரத்து 513 டன், பிற ஆலைகளான பெரம்பலூர், நேஷனல், நடிப்பிசை புலவர், செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இருந்து பெறப்பட்ட 4,327 டன் கரும்பும் சேர்த்து 3 லட்சத்து 45 ஆயிரத்து 940 டன் கரும்பு அரவை செய்யப்பட்டு 9.36 சதவீதம் சராசரி சர்க்கரை கட்டுமானம் பெறப்பட்டுள்ளது.

இந்த அரவை பருவத்தில் அரவை செய்யப்பட்ட 3 லட்சத்து 41 ஆயிரத்து 513 டன் கரும்பில் டன் ஒன்றுக்கு 1,548 ரூபாய் 70 பைசா வீதம் 52.89 கோடி ரூபாய் கிரயத்தொகை விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.கடந்த 2009 - 10ம் ஆண்டு நடப்பு பருவத்துக்கு ஜூலை 15ம் தேதி வரை 11 ஆயிரத்து 567 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் இருந்து வரும் அரவை பருவத்துக்கு 3.50 லட்சம் டன் கரும்பு அரவைக்கு பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கரும்பில் இடைக்கணு புழு : கட்டுப்படுத்த ஆலோசனை**

நாமக்கல்: ""கரும்பில் இடைக்கணு புழுவைக் கட்டுப்படுத்த கரும்பு நடவு செய்த 120 நாளில் இருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு ஒரு சி.சி., வீதம் டிரைக்கோரிராமா, ஒட்டுண்ணி முட்டை அட்டை கட்ட வேண்டும்," என, வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் பேசினார். பரமத்தி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கு கரும்பில் இடைக்கணு புழு தாக்குதல் கட்டுப்படுத்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் பேசியதாவது: நாமக்கல் மாவட்டத்தில் கரும்பு சாகுபடி செய்துள்ள பகுதகிளில் இடைக்கணு புழு தாக்குதல் பரவலாக கணாணப்படுகிறது. இப்புழு கணுக்களை பாதிப்பதால், கணுக்களின் இடைவெளி குறைந்துவிடும். கணுக்களின் உட்புறம் திசுக்கள் சிவந்து விடும். கணுக்களின் அருகே புழுக்களின் துளைகள் இருக்கும். அவை முழுமையாக பாதிக்கப்பட்டு மேலே சத்துகள் செல்லாததால், கரும்பின் வளர்ச்சி குன்றி, குருத்து இலைகள் காய்ந்துவிடும். அதனால் கரும்பின் எடை, தரம், சர்க்கரை சத்துக்கள் குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும்.

இடைக்கணு புழுவைக் கட்டுப்படுத்த கரும்பு நடவு செய்த 120 நாளில் இருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு ஒரு சி.சி., வீதம் டிரைக்கோரிராமா ஒட்டுண்ணி முட்டை அட்டைகளை கட்ட வேண்டும். அட்டைகளை மாலை வேளையில் இலையின் பின்புறத்தில் கட்ட வேண்டும். 150ம் நாள் மற்றும் 210ம் நாளில் சோகை உறிக்க வேண்டும். ஒட்டுண்ணி அட்டை மோகனூர் ஒட்டுண்ணி வளர்ப்பு மையத்தில் கிடைக்கும். தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு அவர் பேசினார்.

**பண்ணை கருவிகள் செயல் விளக்க முகாம்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி வேளாண் பொறியியல் துறை சார்பில் பண்ணை கருவிகள் செயல் விளக்க முகாம் குள்ளிசெட்டிபாளையத்தில் நடந்தது.வேளாண் பொறியியல் துறை சார்பில் பண்ணை கருவிகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற் படுத்தும் வகையில் செயல்

விளக்க முகாம் நடத்தப்படுகிறது. இதுவரை 14 கிராமங்களில் செயல் விளக்க முகாம் நடத்தப்பட்டுள்ளது. இறுதி முகாம் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட குள்ளி செட்டிபாளையத்தில் நடந்தது.இதில், "ஆத்மா' திட்டத்தின் கீழ் பண்ணை கருவிகள் செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

6.5 எச்.பி., முதல் 10 எச்.பி., வரை செயல்திறன் கொண்ட பவர் வீடர் (களை எடுக்கும் கருவிகள்), 12.5 எச்.பி., செயல்திறன் கொண்ட பவர் டில்லர், 24 எச்.பி., செயல்திறன் கொண்ட மினி டிராக்டர், 18 எச்.பி., செயல் திறன் கொண்ட அமர்ந்த நிலையில் களை எடுக்கும் கருவி, மர கிளைகள் எடுக்கும் கருவி, பவர் ஸ்பிரேயர், விவசாயி மூலம் தயாரிக்கப்பட்ட தென்னை மட்டையை உரமாக்கும் கருவி, மரம் அறுக்கும் கருவி, மினி பவர் வீடர், 40 எச்.பி., செயல் திறன் கொண்ட டிராக்டர், பிரஸ் கட்டர், வீட் கட்டர் ஆகிய கருவிகளுக்கு செயல் விளக்கம் கொடுக்கப்பட்டது.

வேளாண் கருவிகள் வாங்க விரும் பும் விவசாயிகள், வேளாண் பொறியியல் துறை அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம். டிராக்டர், டில்லர் ஆகியவற்றை தவிர்த்து மற்ற கருவிகளுக்கு 50 சதவீத மானியமும், டிராக் டர், டில்லர் கருவிகளுக்கு 45 ஆயிரம் ரூபாய் மானியமும் வழங்கப் படும் என, முகாமில் தெரிவிக்கப் பட்டது.முகாமிற்கு, பி.ஏ.பி., பாலாறு படுகை திட்ட குழு தலைவர் பரமசிவம் தலைமை வகித்தார். "ஆத்மா' திட்ட தலைவர் சிவன்மலைசாமி, குள்ளிசெட்டிபாளையம் கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் ராமகிருஷ்ணன், வடக்கு ஒன்றிய துணைத்தலைவர் திருநாவுக் கரசு வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் சக்திவேல் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**ஏலக்காய் வரத்து குறைவால் விலை 60 ரூபாய் அதிகரிப்பு**

கம்பம் : ஏலக்காய் வரத்து தொடர்ந்து குறைவாக உள்ளது. சராசரி விலையில் கிலோவிற்கு 60 ரூபாய் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டிற்கான ஏலக்காய் ஆக்ஷனை சவுத் இண்டியன் கிரீன் கார்டமம் கம்பெனி லிமிடெட்., கே.சி.பி.எம்.சி., சி.பி.ஏ., உட்பட சில நிறுவனங்கள் 15 நாட்களுக்கு முன்னர் துவக்கினர். முதலாவது ஆக்ஷனில் 12 ஆயிரம் கிலோ மட்டுமே கே.சி.பி.எம்.சி., ஆக்ஷனில் பதிவானது. சராசரி விலை கிலோவிற்கு ஆயிரத்து 570 கிடைத்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆக்ஷனிலும் கே.சி.பி.எம்.சி., ஆக்ஷன் கம்பெனிக்கு 12 ஆயிரத்து 500 கிலோ மட்டுமே வரத்து வந்துள்ளது. விலையை பொருத்தவரை கிலோவிற்கு 60 ரூபாய் அதிகரித்துள்ளது. சராசரி விலையாக கிலோவிற்கு ஆயிரத்து 630 ம், அதிகபட்ச விலையாக கிலோவிற்கு ஆயிரத்து 780 ம், குறைந்தபட்ச விலையாக ஆயிரத்து 170 ம் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக ஆக்ஷன் கம்பெனி ரீஜினல் மேனேஜர் அன்பழகன் கூறும் போது " காய் வரத்து தொடர்ந்து குறைவாக உள்ளது. ஆனால் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் காய் வரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் கிலோவிற்கு 60 ரூபாய் விலை கூடுதலாக கிடைத்துள்ளது. எனவே விலையை பொருத்தவரை வரும் காலங்களில் வரத்து குறைந்தாலும் உயர வாய்ப்புகள் உள்ளது' என்றார்.

**பயிர் பாதுகாப்பு காப்பீட்டு திட்ட முனைப்பு இயக்கம்**

கம்பம் : கம்பம் வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள பயிர்களில் நஷ்டம் ஏற்பட்டால் சரி கட்ட வழி செய்யும் பயிர் காப்பீட்டு திட்ட முனைப்பு இயக்கத்தை விவசாயத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கம்பம் உதவி இயக்குநர் (பொறுப்பு) ராமராஜ் கூறியிருப்பதாவது: காரீப் பருவத்தில் நெல், சிறுதானியங்கள், தென்னை மற்றும் எண்ணைய் வித்து பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, இயற்கை இடர்பாடுகள் மற்றும் பூச்சி நோய்களால் சில நேரங்களில் மகசூல் இழப்பு ஏற்படும். இதனால் விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த சூழ்நிலையில் நிலையை சரி செய்யும் பொருட்டு, தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம் மூலமாக தங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களை காப்பீடு செய்து, வருவாய் இழப்பினை ஈடுகட்டும் வழிமுறைகளை விவசாயத்துறை அதிகாரிகள் விளக்க முடிவு செய்துள்ளனர்.

இதற்காக கம்பம் வட்டாரத்தில் நாராயணத்தேவன்பட்டி, உத்தமபுரம், க.புதுப்பட்டி, மேலக்டகூடலூர், கீழக்கூடலூர், காமயகவுண்டன்பட்டி, அனுமந்தன்பட்டி, கம்பம் ஆகிய ஊர்களில் சிறப்பு முகாம்கள் நடத்துகின்றனர். இந்த முகாம்கள் இணை இயக்குனர் பாரி தலைமையில் நடைபெறும் என்றார்.

**.பயிர் விளைச்சலில் சிறந்த விவசாயிகளுக்கு பரிசு : வேளாண்மைத்துறையினரின் ஊக்கத் திட்டம்**

வடமதுரை : பயிர் விளைச்சலில் சிறந்த விவசாயிகளுக்கு மாவட்ட, மாநில அளவில் பரிசு வழங்கும் திட்டத்தை வேளாண் துறை அறிவித்துள்ளது.

---

நலிந்து வரும் உழவுத்தொழிலினை மேம்படுத்த பல்வேறு தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு அரசு வழங்குகிறது. விபரம் அறியாத நிலையில் உள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தி முன்னோடி விவசாயிகளாக மாற்றும் திட்டத்தை வேளாண்மை துறை செய்கிறது. ஆர்வமுள்ள சில விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூலும் எடுத்து வருகின்றனர்.

இவ்வகை விவசாயிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் வேளாண்துறை ஆண்டுதோறும் மகசூல் போட்டி வைத்து பரிசுத்தொகை வழங்குகிறது. இந்தாண்டு வடமதுரை வட்டாரத்தில் தற்போது கதிர் முற்றிடும் நிலையில் கம்பு, சோளம், ஆகிய பயிர்களை இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் வடமதுரை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நுழைவு தொகையை அரசுக்கு செலுத்தி அறுவடைக்கு பதினைந்து தினங்களுக்கு முன்பாக தெரிவித்தால், உழவர்களின் பிரதிநிதி மற்றும் அதிகாரிகள் தலைமையில் அறுவடை மேற்கொண்டு மகசூல் கணக்கிடப்பட்டு பரிசு வழங்க சிபாரிசு செய்யப்படும். மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இப்போட்டியில் பங்கு பெறலாம்.

குறைந்த பட்சம் ஐம்பது சென்ட் நிலத்தில் சாகுபடி செய்திருக்க வேண்டும். கட்டணம் மாநில அளவில் பங்கு பெற நெல், கடலை பயிர்களுக்கு ரூ. 100ம், இதர பயிர்களுக்கு ரூ.50ம், மாவட்ட அளவு போட்டிக்கு நெல், கடலை பயிர்களுக்கு ரூ.50ம், இதர பயிர்களுக்கு ரூ.25ம் செலுத்த வேண்டும். மாவட்ட அளவில் முதல் பரிசு ரூ.10 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ.5 ஆயிரமும், மாநில அளவில் முதல் பரிசு ரூ. 20 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும்.

அறுவடை நிலை பயிர்களுடன் இருக்கும் விவசாயிகள் விவசாய கள அலுவலர்களிடம் தங்களது பெயர், பயிர் ரகம், கிராமம், உத்தேச அறுவடை நாள் போன்ற விபரங்களை தெரிவித்து இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**மானிய விலையில் வேளாண் உபகரணங்கள்**

பழநி : பழநி வேளாண்மை பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் நாகராஜன் அறிக்கை: கந்தப்பகவுண்டன் வலசு, மானூர், ஆயக்குடி, ஏ.கலையம்புத்தூர் கிராமங்களில் ஆத்மா திட்ட செயல் விளக்க முகாம் நடத்தப் பட்டது. புதிய பண்ணைக் கருவிகள் பயன்படுத்தும் முறை, சொட்டுநீர் பாசனம், நுண்ணீர் குழாய் பயன் பாடு தொடர்பான விளக் கம் ஆகியவை அளிக்கப் பட்டது. மேலும் பவர் டில்லர், ஸ்பிரேயர், மினி டிராக்டர், பவர் வீடர், பிரஷ் கட்டர் போன்ற வேளாண் உபகரணங்கள், 50 சதவீதம் வரை மானிய விலையில் வழங்கப் படுகிறது. தேவையான விவசாயிகள், பழநிக் கோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுகலாம். மேலும் விபரங்களுக்கு, 04545-245 602 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**பருத்தி வயல் தின விழா**

ஊத்தங்கரை: ஊத்தங்கரை அடுத்த கெரிகேபள்ளியில் பருத்தி வயல் தின விழா நடந்தது.கிருஷ்ணகிரி அடுத்த எலுமிச்சங்கிரியில் உள்ள டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையம், பருத்தி மினி மிஷன்-2 திட்டத்தின் கீழ் உயர் விளைச்சலுக்கு உகந்த புதிய தொழில் நுட்பங்களை பிரபலப்படுத்த முதன்மை செயல்விளக்கத் திடல்களை ஊத்தங்கரை அடுத்த கெரிகேபள்ளி, படவனூர், கொல்லப்பட்டி , கஞ்சனூர் ஆகிய கிராமங்களில் 25 ஏக்கர் பரப்பில் 25 விவசாயிகளின் நிலங்களில் அமைத்து செயல்படுத்தியது.

இத்திட்டத்தில் பங்கேற்ற விவசாயிளுக்கு சுரபி ரக விதைகள், நுண்ணூட்டச்சத்துகள், வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறிகள் இலவசமாக வழங்கப்பட்டு அவற்றை பயன்படுத்தும் தொழில் நுட்ப முறைகளும் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது. செயல்விளக்க திடல்களில் பருத்தி அறுவடை நிறைவு பெறுவதையொட்டி கெரிகேபள்ளியில் வயல் வெளி தின விழா நடந்தது. டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுனர் செந்தில் குமார் தலைமை வகித்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தரராஜ் திட்டத்தின் நோக்கம் செயல்படுத்தும் விதம் குறித்து பேசினார். விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றியதால் 25 சதவீதம் வரை மகசூல் கூடுதலாக பெற்றதாக கூறினர்.

**குறுவை நெல் சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரம்! அமராவதி பாசன பகுதியில் பசுமை திரும்பியது**

உடுமலை : உடுமலை அமராவதி அணை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதை தொடர்ந்து குறுவை நெல் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன.

உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட 54 ஆயிரத்து 637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவில் உள்ள பழைய ஆயக்கட்டு ராஜவாய்க்கால்கள் எனப்படும், கல்லாபுரம், ராமகுளம், கொமரலிங்கம், கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு வாய்க்கால்கள் மூலம் பாசன வசதி பெறும் 7,520 ஏக்கர் நிலங்களுக்கு கடந்த 9ம் தேதி முதல் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.முதல் சுற்று தொடர்ந்து 21 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. பின், ஐந்து நாட்கள் நிறுத்தம், 10 நாட்கள் திறப்பு என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வரும் நவ., 30 முடிய குறுவை நெல் சாகுபடிக்கு தண்ணீர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதை அடுத்து, பாசன பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி பணிகள் துவங்கின. நாற்றங்கால் அமைத்தல், வயல்களில் உழவு பணிகள் தீவிரமடைந்தன.

பாசன பகுதிகளில் ஏடிடி 43; ஏடிடி 45; ஏடிடி 39 மற்றும் இந்தாண்டு வேளாண் பல்கலையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வீரிய ஒட்டு ரக நெல் விதையான கோஆர்எச் 3 ஆகிய ரக விதைகள் விவசாயிகள் நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் துறை சார்பில், செம்மை நெல் சாகுபடி முறையில் ஒற்றை நாற்று நடவு முறை  மேற்கொள்ளவும், இம்முறையில், 25 செ.மீ., இடைவெளி, வரிசைக்கு வரிசை 25 செ.மீ., இடைவெளியில் நாற்று நடவு செய்தால், நாற்று தூர்கள் அதிகளவு வளர்ந்து, மகசூல் அதிகரிக்கும் எனவும், கோனோவீடர் கருவி மூலம் களை, உரமாக மாற்ற முடியும். காய்ச்சல், பாய்ச்சல் முறையால் மகசூல் அதிகரிக்கும்.இம்முறைகளால், சாகுபடி செலவு குறைவதோடு, மகசூல் அதிகரிக்கும். அரசின் மானிய உதவிகள், நலத்திட்டங்கள் கிடைக்கும் எனவும், நெல் பயிருக்கு தேவையான விதைகள், நுண்ணூட்டச்சத்து உரங்கள், உயிர் உரங்கள் தேவையான அளவு இருப்புள்ளது என தெரிவித்து வருகின்றனர்.  கல்லாபுரத்தில் எட்டு வேளாண் அலுவலர்கள், விவசாயிகளுக்கு சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கி வருகின்றனர்.

அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்தின் தலைமடை பகுதியான கல்லாபுரத்தில் பெரும்பாலும் நாற்றங்கால் அமைக்கும் பணி நிறைவு பெற்று, வயல்களில் சேற்று உழவு, பரம்பு உழவு ஆகிய பணிகள் நடந்து வருகின்றன. சில விவசாயிகள் நடவு பணியில் ஈடுபட்டுள்ளனர். மற்ற பகுதிகளில் நெல் நாற்றங்கால் அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு, குறுவை நெல் சாகுபடி பணி துவங்கி, உழவு, நடவு பணிகளில் விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.நான்கு மாதங்களாக பயிர்கள் இல்லாமல், வறண்டு காணப்பட்ட பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் பசுமையும், குளிர்ச்சியும் திரும்பியுள்ளது.

**நஞ்சை நிலத்தில் மினரல் வாட்டர் தொழிற்சாலை : விவசாயிகள் கடும் எதிர்ப்பு**

உடுமலை : "அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனம் மூலம் பயன்பெறும் 5,000 ஏக்கர், இருபோக நஞ்சை நிலங்கள் பாதிக்கும் வகையில் அமைக்கப்பட்டு வரும் மினரல் வாட்டர் தயாரிப்பு தொழிற்சாலையை அதிகாரிகள் தடுத்து நிறுத்த வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

கோட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு கூட்டம், உடுமலை தாசில்தார் அலுவலகத்தில் நடந்தது.இதில் விவசாயிகள் பேசியதாவது:மானுப்பட்டி - பெருமாள்புதூர் ரோடு 35 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 150 அடி மட்டும் ஆக்கிரமிக்கப்பட்டு வேலி போடப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும். தென்னை மரத்துக்கு இன்சூரன்ஸ் திட்டத்தை உடுமலை பகுதியில் செயல்படுத்த வேண்டும்.தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளின் நிலங்களை

மேம்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ள நிலையில், தமிழகத்தில் மட்டும் அனுமதிப்பதில்லை. மருள்பட்டியில் 20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட 300 வீடுகள் பயன்படுத்தப்படாமல் வீணாகி வருகின்றன.

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உள்ள முரண்பாடுகளால், விவசாயிகள் பயன்பெற முடிவதில்லை. விவசாய திட்டங்கள் குறித்து அதிகாரிகள் விளம்பரம் செய்ய வேண்டும். உரக்கடைகளை கண்காணிப்பதோடு, முறைகேட்டில் ஈடுபடும் உரக்கடைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பி.ஏ.பி., திட்டத்தில், கடைமடைகளுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை.இதனால், நிலத்தடி நீர் மட்டம் அதலபாதாளத்துக்கு சென்று விடுகிறது. அனைத்து கிளை கால்வாய்களிலும் கசிவு நீர் குட்டை அமைத்தால் நிலத்தடி நீர் மட்டம் பாதுகாக்கப்படும். தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில், நகைக்கடன் மட்டுமே வழங்கப்படுகிறது. விவசாய கடன் வழங்குவதில்லை லோன் கட்டினாலும், கணக்கு முடிப்பதில்லை; உர ரசீது வழங்குதில்லை உட்பட பல்வேறு முறைகேடுகள் நடக்கிறது. ஜல்லிப்பட்டி கிராமத்தில் செயற்கை நிலத்தடி நீர் செறிவூட்டும் வகையில், குளம் அமைக்க விவசாயிகளிடம் இருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், இத்திட்டம் செயல்படுத்தாததோடு, உரிய இழப்பீடும் வழங்கவில்லை.அமராவதி அணையில் இருந்து கல்லாபுரம் கிராமத்துக்கு தண்ணீர் கொண்டு செல்லும் கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால்களுக்கு இடையே இடைக்காடு தோட்டம் பகுதியில் தனியார் மினரல் வாட்டர் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இக்கிணறு வாய்க்காலில் இருந்து 100 அடி தூரத்தில் அமைந்துள்ளதோடு, தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது. பத்துக்கும் மேற்பட்ட ஆழ்குழாய் கிணறுகளும் உள்ளன.

இதிலிருந்து 43 எச்.பி., மோட்டார் வைத்து தண்ணீர் உறிஞ்சிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை இயங்கினால், அமராவதி தலைமடை பகுதியில் உள்ள 5,000 ஏக்கர் இரு போக நஞ்சை நிலங்கள் முழுவதும் பாதிக்கும் நிலை உள்ளது. பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீர் அனைத்தும் கனரக மோட்டார் மூலம் தொழிற்சாலை உறிஞ்சிக்கொள்ளும் அபாயம் உள்ளது. விவசாய நிலத்தில் அமைந்து வரும் தொழிற்சாலையை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

---

தினத்தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

***கேரளாவில் நெல் உற்பத்தியை அதிகரிக்க 100 கிராம பஞ்சாயத்துகள் தேர்வு***

*கொழிஞ்சாம்பாறை,*
*ஜூலை.24–*

கேரளாவில் நெல் உற்பத்தியை அதிகரிக்க 100 கிராம பஞ்சாயத்துகளை அரசு தேர்வு செய்து உள்ளது.

நெல் உற்பத்தி குறைவு

கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் இருந்து தான் அதிகளவில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது நெல் பயிரிடுவதற்கு போதிய கூலி ஆட்கள் கிடைக்காததால் பெரும்பாலானோர் மாற்று பயிரை பயிர் செய்து வருகிறார்கள். சிலர் விவசாயத்தில் போதிய லாபம் கிடைக்காததால் நிலத்தை தரிசாக போட்டு விடுகின்றனர். அதை சிலர் விற்றும் விடுகிறார்கள்.

இதனால் கேரளாவில் நெல் உற்பத்தி வெகுவாக குறைந்து உள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள தேவைக்கு பக்கத்து மாநிலமான தமிழகம், ஆந்திரா, கர்நாடகா பகுதிகளில் இருந்த நெல் இறக்குமதி செய்யப்படுகிறது. இதை தொடர்ந்து கேரள அரசு மாநிலத்திலேயே நெல் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டு உள்ளது. இதற்கு மத்திய அரசின் நிதியுடன் செயல்படுத்த திட்டமிட்டு இருக்கிறது.

100 பஞ்சாயத்துகள் தேர்வு

நெல் அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்துவதற்காக கேரளாவில் 100 கிராம பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. கேரள விவசாயத்துறை மூலம் மத்திய, மாநில நிதிகளை பயன்படுத்தி இந்த திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கும் நிதியை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம் அவர்கள் உற்சாகம் அடைந்து நெல் உற்பத்தியை மேற்கொள்வார்கள். இதன் மூலம் 70 ஆயிரம் டன் நெல் உற்பத்தி அதிகரிக்க திட்டமிட்டு உள்ளது.

பாலக்காடு மாவட்டம்

பாலக்காடு மாவட்டத்தில் 30 கிராம பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. அது பற்றிய விவரம் வருமாறு:–

பெருமாட்டி, எலப்புள்ளி, பட்டன்சேரி, நல்லேபிள்ளி, கொல்லங்கோடு, எரிமையூர், பல்லசேனா, பொல்பள்ளி, குழல்மன்னம், எலவன்சேரி, கொடும்பு, தேன்குரிசி, வடக்கன்சேரி, புதுபரியாரம், கொழிஞ்சாம்பாறை, கோட்டாயி, மாத்தூர், முதலமடை, புதுச்சேரி, கொடுவாயூர், நெம்மாரை, கண்ணாடி, குத்தனூர், மேலார்கோடு, கிழக்கன்சேரி, வடவனூர், ஆயிலூர், காவச்சேரி, வண்டோழி, பெருவூம்பு ஆகிய 30 கிராம பஞ்சாயத்துகளை அரசு தேர்ந்தெடுத்து உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு சம அளவு நிதி வழங்கப்படும்.

இந்த தகவலை கேரள விவசாயத்துறை உதவி இயக்குனர் ஒருவர் தெரிவித்தார்.

**நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக உயரும் டாக்டர் சி.ரங்கராஜன் அறிவிப்பு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக உயரும் என பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் டாக்டர் சி.ரங்கராஜன் அறிவித்தார்.

ரங்கராஜன் புதுடெல்லியில் வெள்ளிக்கிழமையன்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் பல்வேறு துறைகளின் வளர்ச்சி குறித்து முக்கிய புள்ளிவிவரங்களை வெளியிட்டார். அவை பின்வருமாறு–

★ நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் பொருளதார வளர்ச்சி 8.5 சதவீதமாகவும், வரும்

*2011–12–ஆம் நிதி ஆண்டில் 9 சதவீதமாகவும் இருக்கும்.*

★ *சென்ற நிதி ஆண்டில் வேளாண் துறையின் வளர்ச்சி 0.2 சதவீதமாக இருந்தது. இது நடப்பு நிதி ஆண்டில் 4.5 சதவீதமாகவும், அடுத்த நிதி ஆண்டில் 4 சதவீதமாகவும் வளர்ச்சி அடையும்.*

*தொழில் துறை*

★ *சென்ற நிதி ஆண்டில் தொழில்துறை 9.3 சதவீத அளவிற்கு வளர்ச்சி கண்டிருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டில் 9.7 சதவீதமாகவும், வரும் நிதி ஆண்டில் 10.3 சதவீதமாகவும் இருக்கும்.*

★ *சேவைகள் துறை 8.5 சதவீதமாக வளர்ச்சி அடைந்திருந்தது. இத்துறை, நடப்பு நிதி ஆண்டில் 8.9 சதவீதம் என்ற அளவிலும், அடுத்த நிதி ஆண்டில் 9.8 சதவீதமாகவும் வளர்ச்சி காணும்.*

★ *உலக பொருளாதார மற்றும் நிதி நிலைமைகளில் மிதமான முன்னேற்றமே காணப்படுகிறது.*

★ *உள்நாட்டில் சேமிப்பு மற்றும் முதலீடுகள் அதிகரித்து வருவது வளர்ச்சியின் தலையாய உந்துசக்திகளாகும்.*

★ *நடப்பு நிதி ஆண்டில் முதலீட்டு விகிதம் 37 சதவீதமாகவும், வரும் நிதி ஆண்டில் 38.4 சதவீதமாகவும் இருக்கும்.*

*சேமிப்பு*

★ *உள்நாட்டில் சேமிப்பு விகிதம், நடப்பு நிதி ஆண்டில் 34 சதவீதத்தை தாண்டும். இது, அடுத்த நிதி ஆண்டில் 36 சதவீதத்தை எட்டும்*

★ *நடப்பாண்டில் வர்த்தக பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 சதவீதமாக (13,780 கோடி டாலர்) இருக்கும். இது, வரும் நிதி ஆண்டில் 9.3 சதவீதமாக உயரும்.*

★ *நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தால் நிதி தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, வந்து கொண்டுள்ள முதலீடுகள் அனைத்தும் எளிதாக ஈர்க்கப்பட்டு விடும்.*

★ *சென்ற நிதி ஆண்டில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு 5,360 கோடி டாலராக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டில் 7,300 கோடி டாலராகவும், வரும் நிதி ஆண்டில் 9,100 கோடி டாலராகவும் அதிகரிக்கும்.*

★ *பருவமழை நன்கு இருக்கும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில், நாட்டின் பணவீக்கம் நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் 6.5 சதவீதமாக குறையும். தற்காலிக மதிப்பீட்டின்படி, சென்ற ஜூன் மாதத்தில் பணவீக்கம் 10 சதவீதத்திற்கு மேல் உள்ளது.*

*பணவீக்கம்*

★ *பட்ஜெட் மதிப்பீட்டின்படி, நடப்பாண்டில் நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 சதவீதமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், நேரடி மற்றும் மறைமுக வரி வசூல் அதிகரிப்பு, தொலை தொடர்பு துறை ஏலங்கள் வாயிலான கூடுதல் வருவாய் மற்றும் பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டது போன்றவற்றால் நிதி பற்றாக்குறை இதை விட குறைய வாய்ப்புள்ளது.*

★ *வருவாய் பற்றாக்குறை, சென்ற நிதி ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.3 சதவீதமாக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டில் 4.6 சதவீதமாக குறையும்.*

★ *உணவு, உர மானியங்களை சீர் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.*

★ *சேவைகள் மற்றும் சரக்குகள் வரியை அமல்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.*

★ *பொருளாதார வளர்ச்சியை 9 சதவீதமாக நிலைநிறுத்த வேண்டுமானால், பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். வேளாண் உற்பத்தியை மேம்படுத்த வேண்டும். அடிப்படைக் கட்டமைப்பு துறைகளை, குறிப்பாக மின்சார துறைகளில் உள்ள இடர்பாடுகள் அகற்றப்பட வேண்டும்.*

***பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உள்நாட்டில் வேளாண் துறை 3.5 சதவீதம் வளர்ச்சி அடையும்***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், நம் நாட்டில் வேளாண் துறை 3 முதல் 3.5 சதவீதம் வரை வளர்ச்சி அடையும் என மத்திய திட்டக் குழு மதிப்பீடு செய்துள்ளது. முன்னர், 4 சதவீத வளர்ச்சியை எட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. முந்தைய மதிப்பீட்டை காட்டிலும் வளர்ச்சி விகிதம் சற்று குறையும் என்ற நிலைப்பாடு உள்ள போதிலும், பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தைக் காட்டிலும், வளர்ச்சி விகிதம் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
பருவமழை
சென்ற ஆண்டில் தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் நாட்டின் பல பகுதிகள் வறட்சிக்கு இலக்காயின. இதனால், அதற்கு முந்தைய 32 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டது. எனினும் நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் (ஜூலை –ஜூன்) வேளாண் உற்பத்தி அமோக வளர்ச்சி அடையும் நிலை உருவாகி உள்ளது.
தற்போது நெல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளது. மேலும், பருவமழையும் ஓரளவிற்கு நன்றாக உள்ளது. இதனையடுத்து, நடப்பு பருவத்தில் நாட்டில் உணவு தானியங்கள் உற்பத்தி நன்கு அதிகரிக்கும் என்று மத்திய உணவு மற்றும் வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
ஜூலை 1–ந் தேதி நிலவரப்படி, 46.46 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 2.3 சதவீதம் (45.43 லட்சம் ஹெக்டேர்) அதிகமாகும்.இதே காலத்தில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு வியக்கத்தக்க வகையில் இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்து 12.96 லட்சம் ஹெக்டேரிலிருந்து 28.86 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.
கரும்பு – பருத்தி
கரும்பு சாகுபடி பரப்பளவும் 13.4 சதவீதம் அதிகரித்து 41.79 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. பருத்தி பரப்பளவும் சுமார் 2 மடங்கு (29.17 லட்சம் ஹெக்டேர்) உயர்ந்து 43.68 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இதுபோன்ற காரணங்களால் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
உணவு தானியங்கள்
கடந்த 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி 23.45 கோடி டன் என்ற அளவில் அமோகமாக இருந்தது. சென்ற ஆண்டு கரீஃப் பருவத்தில், நாட்டின் பல பகுதிகளில் வறட்சி நிலவியது. இதனையடுத்து, சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 7 சதவீதம் சரிவடைந்து 21.82 கோடி டன்னாக குறைந்தது. நடப்பு ஆண்டு பருவங்களில் உற்பத்தி கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு

அதிகரிக்கும் என முன்கூட்டிய மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண் துறையின் பங்களிப்பு தற்போது 17 சதவீதமாக உள்ளது. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 60 சதவீதத்தினர் விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில்தான் ஈடுபட்டுள்ளனர். சென்ற நிதி ஆண்டில், இத்துறை 0.2 சதவீதம் வளர்ச்சி கண்டிருந்தது. பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தின், முதல் மூன்று ஆண்டுகளில் விவசாய துறையின் சராசரி வளர்ச்சி 2.2 சதவீதமாக உள்ளது.

பால் – மீன் வளம்

தற்போதைய வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில், விவசாய துறையின் வளர்ச்சி 3–3.5 சதவீத அளவிற்கே இருக்கும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், வரும் பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலாவது (2012–2017) 4 சதவீத வளர்ச்சியை அடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மத்திய திட்டக் குழு வலியுறுத்தியுள்ளது. உணவுப் பாதுகாப்பு என்பது ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்றும், உணவு தானியங்கள் உற்பத்தியை ஆண்டுக்கு 2 முதல் 2.5 சதவீதம் வரை உயர்த்திச் செல்லும் வகையில் திட்டமிட வேண்டும் என்று மேலும் அறிவுறுத்தியுள்ளது. பால் வளம் மற்றும் மீன் வளம் ஆகியவையும் விவசாயம் சார்ந்த மிக முக்கியமான துறைகளாகும். இந்த இரண்டு துறைகளும் ஆண்டுக்கு 6–7 சதவீத வளர்ச்சி பெற வேண்டும் என்றும் திட்டக் குழு தெரிவித்துள்ளது.